**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

## CC.No.111/2019

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | கலாமணி (PW1) | | |
| Husband's Name | தேவராஜ் | தொழில் | |
| Village | நரியம்பள்ளி | | |
| Taluk | அவிநாசி | Age | **50** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd **day of June 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused 1,2 Present)*

**1ம் எதிரி 2ம் எதிரிக்காகவும், அ.சா.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார். (1ம் எதிரி Party in Person ஆக ஆஜரானதால் கேள்வி பதில் முறையில் குறுக்கு விசாரணையானது பதிவு செய்யப்பட்டது).**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தண்ணீர் பிரச்சனையில் நடந்த குற்ற சம்பவத்திற்கு எனக்கு ஏதேனும் உள்நோக்கம் உள்ளதா என்றால் இல்லை.
2. 02.08.2017ம் தேதி எதிரிகள் முறையில் பீஸ் போய்விட்டதாக நான் மோட்டாரை ஆஃப் செய்த போது எதிரி என்னை பார்த்து கெட்ட வார்த்தையால் பேசினேனா அல்லது அடித்தேனா என்றால் 02.08.2017ம் தேதி அன்று சண்டை இல்லை. 03.08.2017ம் தேதியன்று காலையில் தான் பாப்பாத்தி மற்றும் இராமகிருஷ்ணன் 2ம் எதிரி என்னை பார்த்து கண்டாரோழி, ஒப்பானோழி, முண்ட, அவ இவ என்று திட்டியும், 1ம் எதிரி இராமகிருஷ்ணன் அவரது கையால் என் முகத்தில் குத்தி நான் கீழே விழுந்து விட்டேன். அப்போது 2ம் எதிரி பாப்பாத்தி என் இரு கைகளையும் பிடித்து கொண்டு என்னை கன்னத்தில் அறைந்து, மறுபடியும் 1ம் எதிரி இராமகிருஷ்ணன் பல்லில் குத்தினார். அப்போது வாயில் இரத்தம் வந்து எனக்கு மயக்கம் ஏற்பட்டது.
3. 02.08.2017ம் தேதி எதிரிகள் முறையில் பீஸ் போய்விட்டதாக நான் மோட்டரை ஆப் செய்தபோது கெட்ட வார்த்தை பேசாத எதிரிகள் என்னை அடிக்காத எதிரிகள் என்னுடைய முறை என்று பொய் சொல்லி சேட்டான் முறையில் மோட்டார் போடும் போது என்னை கெட்ட வார்த்தையால் திட்டவோ அடிக்கவோ வர அவசியமே இல்லை என்றால் சரியல்ல, சேட்டான் தண்ணீர் அவரது முறையில் ஓட்டுவதில்லை.
4. நான் முதல் தகவல் அறிக்கையை நன்றாக படித்தேன் என்றால்( மேற்படி கேள்வி

இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்பதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்யப்படவில்லை)

5. ப்ளீஸ் பற்றி நான் ஏதாவது படித்துள்ளேனா என்றால்( மேற்படி கேள்வி இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்பதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்யப்படவில்லை)
6. பியூஸ் போவதற்கும் சப்ளை குறைவிற்கும் உள்ள வேறுபாடு என்ன என்றால் ( மேற்படி கேள்வி இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்பதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்யப்படவில்லை)
7. 10 வருடமாக சேட்டான் பங்கை பார்த்து வரும் நான் அந்தப் பங்கை பற்றி கூறினேனா என்றால் ( மேற்படி கேள்வி இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்பதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்யப்படவில்லை)
8. என்னுடைய தாயார் பூவாத்தாள் கண்ணப்பன் அவர்களிடம் மோட்டார் சப்ளை குறைவாக உள்ளது தண்ணீர் எடுத்து விட வேண்டாம் என்று சொல்ல சொன்னாரா என்றால்( மேற்படி கேள்வி இந்த வழக்கிற்கு தொடர்பு இல்லாதது என்பதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்யப்படவில்லை)
9. எதிரிகள் அடித்ததில் எனக்கு எந்த வரிசையில் எத்தனாவது பல் கீழே விழுந்தது என்றால் நான்கு பற்கள் கீழே விழுந்தது.
10. ஒன்றாம் தேதி என்னை கற்களால் அடிக்கவில்லை என்றும் நான் பொய் கூறுவது சரியா என்றால் என்னை அடித்தீர்கள் அதனால் தான் மருத்துவமனையில் வந்து உள்நோயாளியாக அனுமதிக்க பட்டேன்.
11. உங்கள் மகன் கார்த்திகேயன் சம்பவம் நடைபெற்ற போது எங்கிருந்து வந்தார் என்றால் என் மகன் என்னுடைய மகளின் வீட்டில் இருந்தார் என்னை அடித்த பின்னிட்டு என் மகள் வீட்டில் இருந்து வந்தார்.
12. பாலச்சந்தர் மருத்துவமனையில் இருந்து எப்போது எத்தனை மணிக்கு வீட்டிற்கு சென்றேன் என்றால் மேற்படி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்பு எஸ்எம்எப் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்று விட்டேன்.

13. எதிரிகளுக்கும் புகார் இருக்கும் பத்து வருடங்களுக்கு மேலாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

14. 2 ம் எதிரி அடிக்காமலேயே நான் அடித்ததாக பொய் கூறுகிறேன் என்றால் இல்லை.

15. இரண்டாம் எதிரி பாப்பாத்தி கலாமணி ஆகிய என்னை கன்னத்தில் அடிக்கவும் இல்லை என்னை தொடவும் இல்லை என்றால் சரியல்ல என்னை இரு கன்னங்களிலும் பாப்பாத்தி அடித்தார்.

**மறுவிசாரணை – இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |